# பஞ்சமில்லாமல் கொடுக்கும் பசுமைக்குடில்



காய்கறி சாகுபடிக்கு நாற்றங்கால் அமைத்துவிட்டு ‘மண்ணு சரியில்ல, மழை பெய்யல, வெயில் கொளுத்தது, காத்தடிக்குது’ என்றெல்லாம் புலம்பும் விவசாயியா நீங்கள்? உங்களைப் போன்றோருக்குக் கைகொடுக்கவே காத்திருக்கிறது, நிழல்வலைப் பசுமைக்குடில்’ தொழில்நுட்பம். ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்னரே இங்கே இத்தொழில்நுட்பம் அறிமுகமாகிவிட்டாலும், நாற்றுப் பண்ணைகள் வைத்திருப்பவர்கள் மட்டும் தான் வைத்திருப்பவர்கள் மட்டும்தான் அதிகமாக இதைப் பயன்படுத்தி வந்தனர். தற்போதுதான் பரவலாக காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளும் நாற்று உற்பத்திக்காக இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

அவர்களில் ஒருவராக திருப்பூர் மாவட்டம், குண்டடம் அருகேயுள்ள குங்குமப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த வேலுச்சாமி, இந்தப் பசுமைக்குடில் தொழில் நுட்பத்தில் நல்ல பலன் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர்களின் அனுபவத்தைக் கூறுகையில்!

எனக்கு கிணற்றுப் பாசனத்தோட நான்கு ஏக்கர் நிலம் இருக்கிறது நல்ல செம்மண் பூமிங்கிறதால் மக்காச்சோளம், வெங்காயம், மிளகாய்னு மாற்றி மாற்றி சாகுபடி செய்வேன். சுத்துப்பட்டு முழுக்கவும் தக்காளி, மிளகாய், கத்திரினு காய்கறி விவசாயம்தான் பிரதானம். அதுக்கு விவசாயிகளே நாற்று உற்பத்தி பண்ணிக்குறதால் ஏகப்பட்ட சிரமங்கள் இருந்தது. நாற்றங்கால் போட்டால் விதைத்ததில் முக்காவாசிதான் முளைத்து வரும். அதுலயும் எல்லா நாற்றும் ஒரே அளவாக இருக்காது. வெயில், மழைப் பிரச்னை வேற. அதனால்தான் பெரும்பாலும் நாங்க விலையைப் பற்றிக் கவலைப்படாம நர்சரியில் போய் தேவைப்படுகிற நாற்றுகளை வாங்கிட்டு வந்துகிட்டிருந்தோம். அந்தமாதிரி சமயத்தில்தான் தோட்டக்கலைத்துறை கருத்தரங்கு ஒண்ணுல

கலந்துக்குறதுக்கு வாய்ப்பு கிடைத்தது. ‘விவசாயிகள் குழுவா வந்தால் நாற்றுப்பண்ணை, பசுமைக்குடில், பழப்பயிர் சாகுபடி பண்றதுக்கெல்லாம் மானியம் கிடைக்கும்னு சொன்னாங்க. உடனே எங்க பகுதியிலிருந்து இருபது பேரைத் திரட்டி குழுவை உருவாக்கி ‘நிழல்வலைப் பசுமைக்குடில் நாத்துப்பண்ணை’ அமைக்கற வேலைகளை ஆரம்பித்தேன். நீர் வள, நில வளத்திட்டத்தில் ஒரு லட்சத்து எட்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள உபகரணங்களை மானியமாக கொடுத்தாங்க. அதை வைத்து என்னோட நிலத்துலயே பத்து சென்ட்ல 300 சதுர மீட்டரில் பசுமைக் குடிலை அமைத்தேன்.

ஆரம்பத்தில் எங்க குழு உறுப்பினர்களோட தேவைக்கேற்ற அளவுக்கு ஒரு லட்சம் நாற்றுக்களை உற்பத்தி பண்ணிக்கிட்டிருந்தேன். மற்ற விவசாயிகளும் நாற்று கேட்க ஆரம்பித்ததால் சொந்த செலவுல இப்பு மூன்று லட்சம் நாற்றுகளை உற்பத்தி பண்ணுகிற அளவுக்கு 700 சதுர மீட்டர் அளவுக்கு பசுமைக் குடிலை விரிவுபடுத்தியிருக்கிறேன். நிலத்துல சமமான பகுதியில் பசுமைக் குடிலை அமைத்து அதுல ஃபாகர்னு சொல்ற புகை மூட்டம் மாதிரி நீர் தெளிக்கிற அமைப்பை அமைத்து கொள்ள வேண்டும். பசுமைக் குடில் இருக்குற தரைதளத்தின் மண்ணைப் பயன்படுத்தி, 4 அடி அகலத்தில் ஒன்றரை அடி உயரத்துக்கு பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். பாத்தியோட நீளத்தை நம்ம குடிலின் அளவுக்கு ஏற்ற மாதிரி கூட்டிக் குறைத்துக் கொள்ளலாம். பாத்தி அமைத்து பின்னாடி, பிளாஸ்டிக் ஷீட்டை வைத்து அதை மூடி விட வேண்டும். மேலதான் நாற்று உற்பத்தி பண்ற குழித்தட்டை வைக்க வேண்டும். ஒரு தட்டில் 98 குழிகள் இருக்கும். 100 அடி நீளத்துக்குப் பாத்தி அமைத்தால் அதில் 200 தட்டுகளை வைக்க முடியும்.

தட்டுகளில் உள்ள குழிகளில், ஊட்டமேற்றிய தேங்காய் நாரை நிரப்பணும். ஒரு தட்டுக்கு ஒரு கிலோ நார் தேவைப்படும். அதற்குப் பிறகு ஒவ்வொரு குழியிலயும் ஒரு விதையை விதைக்கணம். தினமும் ஃபாகர் மூலமா 10 நிமிஷம் தண்ணி பாய்ச்ச வேண்டும். களைகள் வந்தா எடுத்து விட வேண்டும். வேற பராமரிப்பு எதுவும் தேவைப்படாது. பசுமைக்குடிலுக்கள் ஒரே மாதிரியான வெப்பநிலை பராமரிக்கப்படுறதால் எல்லா நாற்றுகளும் ஒரே அளவுல முளைத்து வரும். அதில்லாமல் பூச்சிகள், பூஞ்சணத் தாக்குதல் இல்லாம இருக்கும். தக்காளி நாற்று 22 நாளில் உற்பத்தியாகிவிடும். காலிஃப்ளவர் நாற்று 25 நாள்லயும் மிளகாய், ப்பாளி நாற்றுகள் 40 நாள்லயும் உற்பத்தியாகிவிடும்.பப்பாளி நாற்றுக்கு குழித்தட்டு போதாது.

அதற்கு மட்டும் பெரிய அளவுல இருக்கிற பிளாஸ்ளக் டம்ளர்களைப் பயன்படுத்தலாம். இதுல முக்கியமானத் தொழில்நுட்பம் நிழல்வலைப் பசுமைக் குடிலும், ஃபாகர் அமைப்பு மட்டும்தான். அது மூலமா எந்த நாற்றுக்களை வேணும்னாலும் உருவாக்கிக்க முடியும். குடிலுக்குள்ள நாற்று

உருவாக்குறப்போ அதுக்கு பட்டமெல்லாம் கிடையாது. வருஷம் முழுதும் உற்பத்தி பண்ண முடியும். பெரியளவுல இந்தக் குடிலை அமைத்து விவசாயம் செய்கிறப்போது பட்டமில்லாமல் வருஷம் முழுதும் காய்கறி சாகுபடி பண்ண முடியும். இந்தக் குடிலுக்கு பயன்படுத்தற வலை 3 வருடத்துக்குத்தான் தாங்கும். அதற்குப் பிறகு புதிதாகமாத்திவிட வேண்டும். 40 நாளுக்குள்ள சராசரியாக 5 லட்சம்கிற கணக்கில் வருடத்துக்கு 45 லட்சம் நாற்றுகள் உற்பத்தி பண்ண முடியும்.ஒரு நாற்றுக்கு சராசரியாக 7 பைசா லாபம் கிடைக்கும்.17 சென்ட் நிலத்தில் வருடத்துக்கு சராசரியாக 3 லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

தொடர்புக்கு

வேலுச்சாமி

அலைபேசி : 99439-55505